செய்தி வெளியீடு எண்: 403 நாள்:08.07.2021

# செய்தி வெளியீடு

போலிப்பட்டியல்கள் தயார் செய்து, வரிஏய்ப்பவர்கள் மீது, கடுமையான நடவடிக்கை எடுக்க மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின்போது, திருநெல்வேலி கோட்டத்திற்குட்பட்ட சிமெண்ட் விற்பனை செய்யும் வணிகர் ஒருவர், சரக்குகளை வழங்காமல், போலிப்பட்டியல்கள் மூலம் பயனாளருக்கு மோசடியாக உள்ளீட்டு வரிவரவை மாற்றுவது தெரியவந்தது. அதனடிப்படையில், வணிகவரி ஆணையர் அவர்களின் ஆணையின்படி, மாநிலவரி நுண்ணறிவுப்பிரிவு இணைஆணையர், திருநெல்வேலி, அவர்களின் மேற்பார்வையில், போலிப்பட்டியல்கள் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட 11 வணிகர்களின் வியாபார இடங்களில், சரக்கு மற்றும் சேவைவரிச் சட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது சிமெண்ட் விற்பனை செய்யும் மேற்படி வணிகர், பலகோடி ரூபாய் மதிப்பிலான விலைப்பட்டியல்களை, திருநெல்வேலி பகுதியை சார்ந்த கட்டிடம் மற்றும் சாலை ஒப்பந்தப்பணிதாரர்களுக்கு அளித்து, அவர்கள் போலி உள்ளீட்டு வரி மூலம் பயனடைய செய்துள்ளது தெரிய வந்துள்ளது. போலிப்பட்டியல் தயாரித்த வணிகர் மீதும், போலி உள்ளீட்டு வரியைத் துய்த்த பயனாளிகளின் மீதும் சரக்கு மற்றும் சேவைவரிச் சட்டத்தின் கீழ், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான புலனாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முதன்மை செயலாளர்/வணிகவரி ஆணையர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9